
புத்தகச்செய்தி

புத்தம் புதிய நூல்களின் அறிமுகம்

யாதானும் நாடுஆமால் ஊர்ஆமால் என்ஒருவன்

சாந்துணையும் கல்லாத வாறு – திருக்குறள்-397



இந்திய வரலாற்றை 'வைகைக்கரை'யிலிருந்து தொடங்கி எழுதப்பட்ட 'இந்திய நூலக இயக்கம்' என்னும் நூலின் சுருக்கம் இந்நூல்.

நூல் அமைப்பு

நூலகவித்தகர் வே.தில்லைநாயகம்



நூல் அமைப்பு பற்றி - தொல்காப்பியம் தொடங்கி இந்திய தர நிருணயக் கழகம் வரை – பல்வேறு இலக்கணங்கள் கூறப்பட்டு உள்ளன. அத்தனையும் தொகுத்து வகுத்து, பகுத்து, சுருக்கிப் பார்த்தால் ஒரு நூல் கீழ்க்கண்ட பகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்:

1. முன்புற மேலட்டை *(Front cover leaf)*
2. முன்பக்க ஒட்டுத்தாள் *(Front blank side leaf)*
3. சுருக்கத் தலைப்பு *(Half title leaf)*
4. தலைப்புத் தாள் *(Title leaf)*
5. படையல் *(Dedication)*
6. முகப்புப் படம் *(Frontispiece)*
7. அறிமுக உரை *(Foreword)*
8. முன் உரை *(Preface)*
9. நன்றி உரை *(Acknowledgement)*
10. பொருள் அடக்கம் *(Contents)*
11. படப்பட்டி *(List of Illustrations)*
12. பதிப்பாளர் உரை *(Publisher's note)*
13. சுருக்கக் குறிப்பு *(List of abbreviations)*
14. குறியீட்டுப்பட்டி *(List of symbols etc.)*
15. திருத்தம் *(Addenda / Corrigenda)*
16. பொருள் *(Text)*
17. பின்இணைப்புகள் *(Appendix)*
18. நூல்தொகை *(Bibliography)*
19. அட்டவணை *(Tables)*
20. விளக்கப்படங்கள் *(Charts)*
21. படங்கள் *(Illustration – Graphs)*
22. பின்பக்க ஒட்டுத்தாள் *(Back blank side leaf)*
23. பின்புற மேலட்டை *(Back cover leaf)*

இவற்றுள் எவையெல்லாம் தங்களது நூலில் இருக்கின்றன என நூலாசிரியரும் பதிப்பாளரும் சரிபார்த்துக்கொள்க.

தமிழ் நூல் வளர்ச்சிக் கழகம்

நூலகச்செம்மல் ந. ஆவுடையப்பன்



*1988-89*ஆம் ஆண்டில், ஒருநாள் பிரபல குழந்தைக்கவிஞர் அழ.வள்ளியப்பா அவர்கள் பொதுநூலக இயக்குநர் சி.பழனிவேலு அவர்களைப் பார்க்க வந்திருந்தார். குழந்தைக்கவிஞர் வந்ததின் நோக்கம், அரசு சார்பில் குழந்தைகளுக்கான நூல்களை வெளியிட வேண்டும்; அதன் மூலம் குழந்தைகளுக்கான நூல்கள் அதிக அளவில் வெளிவரச் செய்ய வேண்டும் என்பதுதான். கவிஞர் அவர்களின் நோக்கம் நூற்பதிப்பு தொடர்பானது என்பதால், அப்போது நூல்கள் பிரிவின் அலுவலராகப் பணியாற்றி வந்த என்னை கவிஞருடன் பேசுமாறு இயக்குநர் கூறினார். நானும் கவிஞர் அவர்களும் கவிஞர் கொண்டுவந்த குழந்தைகளுக்கான நூல்கள் பதிப்பு தொடர்பான அறிக்கையைப்பற்றி விரிவாக விவாதித்தோம்.


அதன்படி தமிழகத்தில் தற்போது குழந்தைகளுக்கான நூல்கள் மிகக்குறைவாக வெளியாகின்றன; இலக்கியம் தவிர பிற துறைகளில் வெளிவரும் நூல்கள் குறிப்பிடத்தக்க அளவில் இல்லை; குழந்தைகளுக்கான நூல்களைப் பதிப்பிக்க பதிப்பாளர்கள் விருப்பமுடன் முன்வருவதில்லை. எனவே, பொதுநூலகத்துறை குழந்தைகளுக்கான நூல்கள் அதிக அளவில் பதிப்பிக்க உறுதுணையாக இருக்க வேண்டும் என்பன போன்ற கருத்துகளை அடிப்படையாகக்கொண்ட அறிக்கையாக இருந்தது. இதுபற்றி இருவரும் விவாதித்து ஒத்த கருத்தை எட்டினோம். அதன்படி ரூ.*10* இலட்சம் கொண்ட சுழல்நிதி பொதுநூலக இயக்ககத்தில் அமைப்பது என்றும் அந்நிதியின் மூலம் ஆண்டிற்கு *100* குழந்தைகளுக்கான நூல்களைப் பதிப்பிப்பது என்றும் அந்நூல்கள் அப்போதிருந்த *1600* பொது நூலகங்களுக்கும் ஒரு படி வீதம் ஒவ்வொரு தலைப்பிலும் *1600* படிகள் அச்சிடுவது எனவும் அந்நூல்களுக்கு உரிய தொகையை மாவட்ட நூலக ஆணைக்குழுக்களிடமிருந்து பெற்றுச் சுழல்நிதியில் சேர்த்து மீண்டும் *100* புதிய நூல்களை வெளியிடுவது எனவும் முடிவுசெய்தோம். இதன் மூலம், புதுப்புது தலைப்புகளில் சிறந்த குழந்தைகளுக்கான நூல்கள் வெளிவருவதை உறுதிசெய்வதுடன், புதிய குழந்தைகளுக்கான எழுத்தாளர்களை உருவாக்க முடிவதுடன், குழந்தைகளிடம் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவும் இயலும். இதற்கான உள்கட்டமைப்பு ஒன்றினை பொதுநூலக இயக்குநர் கட்டுப்பாட்டில் உருவாக்கி தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் செயல்படும் விதத்தில் விதிமுறைகள் அமைக்கலாம் எனவும் இயக்குநரிடம் எங்களின் கருத்தினைத் தெரிவித்தோம்.

எங்களின் கருத்தினை இயக்குநர் ஏற்றுக்கொண்டு, அதனைச் செயல்படுத்த பகுதி-*2* திட்டத்தில் *(Part-II Schemes)* அரசுநிதியில் செயல்படுத்த அரசுக்கு உரிய கருத்துரு சமர்ப்பிக்கலாம் என்று தெரிவித்தார். அதன்படி *Tamil Book Promotion Corporation* என்ற தலைப்பில் நூலகத்துறைக்கான பகுதி-*2* திட்டத்தில் சேர்ந்து அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது. அரசுநிதி ஒதுக்கீடு இல்லாததால் இக்கருத்துரு செயல்பாட்டிற்கு வரவில்லை தொடர்ந்து சில ஆண்டுகள் இக்கருத்துரு அனுப்பப்பட்டது. நடைமுறைப்படுத்த ஒப்புதல் கிடைக்கவில்லை. அதற்கு முக்கிய காரணம், நூலகங்கள் உள்ளாட்சிகள் வசூலிக்கும் நூலகவரியில் செயல்படுபவை. பகுதி-*2* திட்டம், அரசுநிதியில் செயல்படுத்தப்படும். இந்த வேறுபாட்டால் இத்திட்டத்திற்கு ஒப்புதல் கிடைக்கவில்லை.

தற்போது நூலக ஆணைக்குழுக்கள் நிதிநிலைமையில் நல்ல முன்னேற்றம் உள்ளன. இத்திட்டத்தை நூலகநிதியிலேயே செயல்படுத்த வாய்ப்புகள் உள்ளன. இத்திட்டம் நடைமுறைக்கு வந்தால் குழந்தைகளுக்கான நூல் வெளியீட்டில் தமிழகத்தில் நல்ல மாற்றங்கள் ஏற்படும்.

நூல்வெளியீட்டு விழா





புதுச்சேரி வரலாற்றுச் சங்கத்தின் சார்பில் அச்சங்கப் பொருளாளர் த.ந.கோபிராமன் எழுதிய "நாணயவியல் கலைச்சொல்லகராதி" என்னும் நூல் 2026 08 11ஆம் நாள் வெளியிடப்பட்டது. விழாவிற்கு சங்கத் தலைவர் ந. வேங்கடேசன் தலைமை வகித்தார். செயலர் கஸ்பார் முத்தப்பா வரவேற்றார். நூலை சங்கப்புரவலர் மருத்துவர் நல்லாம் வெளியிட்டார். சங்கத் துணைத்தலைவர் ப. திருநாவுக்கரசு வாழ்த்திப் பேசினார். புதுவைத் தமிழ்ச் சங்கத்தின் செயலர் சீனு.மோகன்தாசு நூலைத் திறனாய்வு செய்தார். நூலாசிரியரின் ஏற்புரைக்குப் பின்னர், சங்கத் துணைத்தலைவர் அ. இராமதாஸ் நன்றி நவின்றார்.

வாசகர் பங்களிப்பையும் வரவேற்கிறோம்

புத்தகச்செய்தி இதழின் வாசகர்களும் தாங்கள் படித்த புதிய புத்தகங்களை அவை இந்த ஆண்டு வெளிவந்தவையெனில் அறிமுகப்படுத்தலாம். kuralneri45@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கோ 9445407120, 9791861662, 7598636209, 96009 89209 என்னும் புலன எண்களுக்கோ தகவல்களைத் தொகுத்து அனுப்பலாம்.

புத்தக வரவுகள்



தொகுத்தளிப்பவர்:
க.அரிஅரவேலன்
[சிறப்பாசிரியர்-இந்தியா]

அண்ணாமலை, சி; **அவதாரம்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.180; நாதம் பதிப்பகம்; சிறுகதைத் தொகுப்பு.

அந்துவன்; **ஆழிகொண்டான்**; மருதுமோகன் (மொழி); முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.450; வானதி பதிப்பகம், தியாகராய நகர், சென்னை 600017; புதினம்.

அமட்டா, பால் டி; **மார்க்சியத்தின் பொருள்**; பதிப்பு ?; 2026; பக்.380; ரூ.400; சிந்தன் புக்ஸ், 327/1 திவான் சாகிப் தோட்டம், டிடிகே சாலை, இராயப்பேட்டை, சென்னை 600014; அரசியல்.

அமீர் அல்தாஃப், எம் (மொழி); **அல்பிரூனி** – ஒரு ஞானக் கருவூலம்; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.200; புதிய சமுதாயம் அறக்கட்டளை; வாழ்க்கை வரலாறு.

அமுதா புண்ணியமூர்த்தி; **எனக்கு மட்டும் ஏன் இப்படி?**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.175; சந்தியா பதிப்பகம், சென்னை; இலக்கியம்-கதைத்தொகுப்பு

அமுதா செல்வி; **மையிருளி**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.500; அடையாளம் பதிப்பகம்; புதினம்.


அரசெழிலன், பி. இரா; **பூப்பு நீராட்டு விழா தேவையா?**; மறுபதிப்பு; 2026; பக். 100; ரூ. 100; நன்செய் பதிப்பகம், ஆதம்பாக்கம், சென்னை; ஓவியா, அரங்க மல்லிகா, பானுமதி, ஷாலினி, அஜிதா, தா.பெ.அ. தேன்மொழி, புதிய மாதவி, மேரி ஜெயந்தி, நளினிதேவி, சா.மா. அறிவுக்கண்ணு, கலை இலக்கியா, மு.சு. கண்மணி, இர. மணிமேகலை, இரா. உமா, தமிழ்ப்பாவை, தமிழ்நதி, க. சுமதி, அருணா ஆகியோர் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு. சமூகவியல்.



அருணன் (புனை. இயற்பெயர்: கதிரேசன்); **சுதந்திர கால மதுரை**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.250; வசந்தம் வெளியீட்டகம், சென்னை; வரலாறு.

அறிவுமதி; **பாரி**; முதற்பதிப்பு; 2026; பக்.168; ரூ.400; தமிழ் அலை பதிப்பகம், சென்னை 600086; கவிதை

ஆரோக்கியதாஸ், ஆர்.ஏ.பி; **கண்ணில் குத்திய முட்கள்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.150; படி வெளியீடு; கவிதைத்தொகுப்பு.



ஆனந்தகுமார், ச; **முத்தமிடும் கூழாங்கற்கள்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.160; வேரல் புக்ஸ், சென்னை; இலக்கியம் – கவிதை.

இக்லாஸ் உசேன்; **இந்தி எதிர்ப்புப் போர்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.90; கருஞ்சட்டைப் பதிப்பகம், சென்னை; வரலாறு.

இக்லாஸ் உசேன் (தொகு); **சுபவீயின் மொழியும் மனிதனும்**; முதற்பதிப்பு; 2026; பக்கம் 240; ரூ.300; கருஞ்சட்டைப் பதிப்பகம், 120 நந்தமுரி தாரக ராமராவ் சாலை, கோடம்பாக்கம், சென்னை – 600024; மொழியியல்

இரவிச்சந்திரன், சிதம்பரம்; **வாழ்வோம், வாழவிடுவோம். . .** ; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.160; பட்டறிவுப் பதிப்பகம், மதுரை; சுற்றுச்சூழலியல்

இராமசுப்பிரமணியன், சு; **சங்க இலக்கியத்தில் பண்டைத்தமிழர் வாழ்வியல்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.480; பொன்னி வெளியீடு; இலக்கியத் திறனாய்வு.

இராமசுப்பிரமணியன், சு; **சூரியப் புள்ளிகளும் இளம்வயது மரணங்களும்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.150; பொன்னி வெளியீடு, சென்னை; இயற்பியல்

இறையன்பு; **என் பல்வண்ணக் காட்சிக்கருவி**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.400; விஜயா பதிப்பகம், கோயமுத்தூர்; இலக்கியம் – நூல்களைப்பற்றிய 50 கட்டுரைகளின் தொகுப்பு.

கதிர்சக்தி; **ரீங்ங்ங். . .** ; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.130; மௌவல் பதிப்பகம், சென்னை; இலக்கியம் – கதைத்தொகுப்பு.

கமலாலயன்; **ச. தமிழ்ச்செல்வன் படைப்புலகம்**; முதற்பதிப்பு; 2026;பக்.?; ரூ.120; பாரதி புத்தகாலயம், சென்னை; இலக்கியத் திறனாய்வு.

கரிகாலன்; **ரகசிய சுடர்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.120; களம்புதிது; கவிதைத்தொகுப்பு.

கரிகாலன்; **Scroll Up: GenZ அரசியல் கவிதைகள்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.200; களம்புதிது; கவிதைத்தொகுப்பு.

கல்யாணராமன்; **நூற்றெட்டு**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.160; வேரல் புக்ஸ்; இலக்கியம் - கவிதைத்தொகுப்பு

கிரிஸ் ஹார்மன்; **மார்க்சியம் எவ்வாறு இயங்குகிறது?**; பதிப்பு ?; 2026; பக்.194; ரூ.250; சிந்தன் புக்ஸ், 327/1 திவான் சாகிப் தோட்டம், டிடிகே சாலை, இராயப்பேட்டை, சென்னை 600014; அரசியல்.

கிருட்டிணன், ஆ; **காசா பேரழிவு**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.350; மருது பதிப்பகம்; அரசியல்

கிருஷ்ணகோபால், கே; **கௌசிகா காற்று**; முதற்பதிப்பு; 2026;பக்.?; ரூ.90; புஸ்டகா வெளியீடு; இலக்கியம் – சிறுகதைத்தொகுப்பு.

கிளாடி பிராய்ல்; **மாவோவின் சீனத்தில் சோசலிசமும் பெண் விடுதலையும்**; விவேக் (மொழி); முதற்பதிப்பு; 2026; பக்.320; ரூ.350; சிந்தன் புக்ஸ், 327/1 திவான் சாகிப் தோட்டம், டிடிகே சாலை, இராயப்பேட்டை, சென்னை 600014; அரசியல்; ISBN: 9789349994645

குழந்தைசாமி, வே; **உள்ளத்தனையது உயர்வு**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.170; புஸ்தகா வெளியீடு; உளவியல்

குறிஞ்சி, கண; **தமிழர் தலைவர் பழ. நெடுமாறன்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.130; புதுமலர் பதிப்பகம்; வாழ்க்கை வரலாறு-பேட்டி வடிவில்.

கோபிராமன், த.ந.; **நாணயவியல் கலைச்சொல்லகராதி**; முதற்பதிப்பு; 2026; பக். 144; ரூ.240; தொல்புதையல் பதிப்பகம், 125, 5ஆவது குறுக்குத் தெரு, ராகவேந்திரா நகர், பூமியான் பேட்டை, புதுச்சேரி 605005; அகராதி

சசிகலா தேவி, செ; **தமிழகத்தில் சமூகநீதிப் போராளிகள்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.180; சுரா பதிப்பகம், சென்னை; வாழ்க்கை வரலாறு.

சந்தோசம், வி.ஜி; **உலகப் பொதுமறைக்கு ஓர் உரை**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.300; சத்தனம்மாள் பதிப்பகம்; இலக்கியம் உரை


சத்யசாந்தி; **ஆழ்கடல் மழலைமுத்துகள்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.150; கனவுத்தமிழ் பதிப்பகம்; கதைகள்

சில்வியா ஆஷ்டன் – வார்னர்; **ஓர் ஆசிரியர்**; ராஜேந்திரன், ஜி (மொழி); முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.300; தன்னறம் நூல்வெளி – குக்கூ காட்டுப்பள்ளி; கல்வியியல்

சிற்பி பாமா; **பேரண்டம் ஒரு திறனாய்வு**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.200; சிற்பி பதிப்பகம்; வானியல்

சீனு, ரா (தொகு); **தெற்கெல்லைப் போராட்டப் பதிவுகள்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.200; கொற்றவை பதிப்பகம்; வரலாறு

சுதாகர் கணேசன் (தொகு); **தமிழர்களின் கலங்கரை விளக்கம்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.350; இனி புக்ஸ்; வாழ்க்கை வரலாறு - கா.ந.அண்ணாதுரை பற்றிய கட்டுரைகளின் தொகுப்பு.



சுதாகர் கஸ்தூரி; **நெஞ்சிலோர் நண்டு**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.190; சுவாசம் பதிப்பகம்; மருத்துவம்.

சுந்தரராமன், கே; **குன்றுதோறும் குமரன்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.200; இந்து தமிழ்திசை வெளியீடு; சமயம்

சுனில், ஜெ; **முன்பதிவு செய்யப்படாத பயணச்சீட்டு**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.175; குடக்கடல் பதிப்பகம்; சிறுகதைத்தொகுப்பு

செந்தாரகை; **கடந்து நிலைக்கு காலம்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.390; கருப்புப் பிரதிகள், சென்னை. இலக்கியம் – கவிதைத் தொகுப்பு.

செல்வராஜ், வடகரை; **புதிய தொழிலாளர் சட்டங்கள்**; முதற்பதிப்பு; 2026; பக்.832; ரூ.1150; ரேவதி பப்ளிகேஷன்ஸ்; சட்டம்

சோழராஜன், அ; **அறியவேண்டிய அரிய தகவல்கள்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.270; கோரல் பப்ளிஷர்ஸ் & டிஸ்டிரிபியூட்டர்ஸ்; வாழ்க்கைவரலாறு

சோழராஜன், அ (மொழி); **நேருவின் பார்வையில் மன்னர்களும் தலைவர்களும்**: மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதங்களில் இருந்து...; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.300; கோரல் பப்ளிஷர்ஸ்; வரலாறு.


தமிழ்க்குமரன், கா.சி; **கொக்கரவல்லி**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.180; தேநீர் பதிப்பகம்; சிறுகதைத்தொகுப்பு.

தமிழவன்; **சொற்பொழிவாளன்**; ஓவியம்: மாளவிகா பி.சி.; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ. 180; யாவரும் பதிப்பகம், சென்னை; சிறுகதை

தமிழழகன், வெ; **நோயின்றி நூறாண்டு வாழும் விதிகள்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.200; அருணா பப்ளிகேஷன்ஸ்; மருத்துவம்

தாயம்மாள் அறவாணன் (பதி); **க.ப.அறவாணனின் மொழி அரசியல்**; முதற்பதிப்பு; 2026; பக்.88; ரூ.100; தமிழ்க்கோட்டம், அமைஞ்சிக்கரை; சென்னை 600029; கல்வியியல்

திவாகர் ரங்கநாதன் (பதி); **ஞானக்கூத்தன் கட்டுரைகள்**: இருதொகுதிகள்; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.1590; காலச்சுவடு பதிப்பகம், சென்னை; இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பு.



திருநாவுக்கரசு, க; **திராவிட இயக்கத் தூண்கள்**; பதிப்பு ?; 2026; பக்.?; ரூ.620; தளபதி பதிக்கம், சென்னை; வாழ்க்கை வரலாறு – திராவிட இயக்கத் தலைவர்களின் வரலாறு.

தில்லைநாயகம், வே; **நூலகக்கதை**; நிவேதா அருள்வேலன் & நிரஞ்சனா அருள்வேலன் (பதி) இரண்டாம் பதிப்பு; 2026; பக். 72; ரூ.90; பரிசல் புத்தக நிலையம், சென்னை; நூலகவியல் – நூலக வரலாறு.

தில்லைநாயகம், வே; **வள்ளல்கள் வரலாறு**; நிவேதா அருள்வேலன் & நிரஞ்சனா அருள்வேலன் (பதி); நான்காம் பதிப்பு; 2026; பக்.56; ரூ.80; பரிசல் புத்தக நிலையம், சென்னை; வாழ்க்கை வரலாறு.

தேனருவி மாரிமுத்து (தொகு); **பெரியார் 100**: பெரியாரிடம் 100 கேள்விகள்; முதற்பதிப்பு; 2026; பக். 56; ரூ.80; இளமாறன் பதிப்பகம்; சமூகவியல்

நடராஜன், ஆயிஷா இரா; **வகுப்பறை புதிது**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.180; இந்து தமிழ்திசை; கல்வியியல்


நரேந்திரகுமார், இரா; **சேறையின் செல்வன்**: சேத்தூர் ந. இராசையா வாழ்வும் பணியும்; முதற்பதிப்பு; 2026; பக்.? ரூ.500; காவ்யா, சென்னை; வாழ்க்கை வரலாறு.

நாகப்பன் சூரியநாராயணன்; **நோய்க்கு இடம் கொடேல்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.320; கருப்புப் பிரதிகள்; மருத்துவம்.

நிக்கொலாய் கோகல்; **மேல்கோட்டு**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ. 110; மின்னங்காடி பதிப்பகம், சென்னை; மொழிபெயர்ப்புப் புதினம்; ISBN: 9789392973697.

பழனித்துரை, க; **அரசமைப்புச் சாசனம் முகப்புரை – ஓர் எளிய அறிமுகம்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.90; தன்னறம் வெளியீடு; சட்டம்

பிரசாத், ஆர்.கே; **அப்துல்கலாம் – சொல்லப்படாத கதைகள்**; கமலாலயன் (மொழி); முதற்பதிப்பு; 2026; பக்.228; ரூ.400; இந்து தமிழ்திசை வெளியீடு; வாழ்க்கை வரலாறு



பிரதாப ருத்ரன்; **ஆப்டிகல் மாயை**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.300; வேரல் புக்ஸ்; கவிதைத்தொகுப்பு; ISBN: 9788168892965.

பிரேமா அருணாசலம்; **பத்தினித் தெய்வங்களும் பரத்தையர் வீதிகளும்**; பதிப்பு ?; ரூ.270; பரிசல் புத்தக நிலையம், சென்னை; சமூகவியல்.

பூங்குன்றன், கலி; **முதல் ஹிந்தி எதிர்ப்புப் போராட்டம் வரலாற்றைத் திரிப்பது யார்?**; பதிப்பு ?; 2026; பக்.32; ரூ.30; திராவிடர் கழக (இயக்க) வெளியீடு, பெரியார் திடல், 84/1, 50 ஈ.வெ.கி.சம்பத் சாலை, வெப்பேரி, சென்னை-600 007; வரலாறு

பொன் சே; **சாமானியனும் சாதிக்கலாம்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.199; இலக்கியா பதிப்பகம்; சமூகவியல்

போரிஸ் பெட்னி; **யுவதிகள்**; மாஜினி (மொழி); பதிப்பு ?: 2026; பக்.380; ரூ.430; சிந்தன் புக்ஸ், 327/1 திவான் சாகிப் தோட்டம், டிடிகே சாலை, இராயப்பேட்டை, சென்னை 600014; சோவியத் பின்புலத்தில் எழுதப்பட்ட புதினம்.

மணி, ஆ; **சங்க இலக்கியம்: அழிப்பு முயற்சிகளும் வெளிப்பட்ட வரலாறும்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.200; தமிழன்னை ஆய்வகம்; இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள்

மணிமாறன்,கடலூர்; **புகழ்மணக்கும் பூக்கள்**; முதற்பதிப்பு; 2026; பக்.104; ரூ.100; விடியல் வெளியீட்டகம், 153 பெரியார் நகர், குளித்தலை 639104; கவிதைத்தொகுதி.

மாறன், பெ.நா; **வளைகுடாப்போரும் சுயசார்பும்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.100; தமிழ் உறவு வெளியீடு; பொருளாதாரம்

முத்தையா வெள்ளையன்; **பென்சில்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.80; கற்றளி பதிப்பகம்; அறிவியல்

முருகேஷ், மு & சொக்கலிங்கம், ஆழ்வார்குறிச்சி ப (தொகு); **முற்றத்தில் உறங்கும் நிலவு**; முதற்பதிப்பு; 2026;பக்.?; ரூ.110; அகநி வெளியீடு, வந்தவாசி; இலக்கியம் – ஐக்கூக்கவிதைத்தொகுப்பு.

மேகலா சித்ரவேல்; **எம்.ஜி.ஆர். திரைப்பட பாடல்களில் சமுதாய மேம்பாட்டுச் சிந்தனைகள்** – இரண்டாம் தொகுதி; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.1050; நம் பதிப்பகம்; பாடல் திறனாய்வு

மோகன், வி (தொகு); **பொன்விழா மலர்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.?; ஐசிஎப் யுனைடெட் ஒர்க்கர்ஸ் யூனியன், சென்னை; சமூகவியல்

யாழ்ப்பாவாணன் (புனை – இயற்பெயர்: காசி-ஜீவலிங்கம்); **யாழ்ப்பாவாணனின் துளிப்பாக்கள்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.90; இனிய நந்தவனம் பதிப்பகம்; கவிதைத் தொகுப்பு.



ரமணி, ப.பா; **வங்கம் தந்த வணங்காமுடி**: தோழர் தாரகேஷ்வர் சக்கரவர்த்தி வாழ்வும் பணியும்; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.100; தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்; வாழ்க்கைவரலாறு.

ரமேஷ், கி; **நாகையா என்றொரு நடிகர்**; முதற்பதிப்பு; 2026; பக்.75; ரூ.110; நாதன் பதிப்பகம், சாலிகிராமம், சென்னை-93

ரவிஉதயன்; **அந்தச் சுடரில் ஓரிரவு**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.120; வம்சி புக்ஸ், திருவண்ணாமலை; கவிதைத்தொகுப்பு.

ரவீந்திரன், டி.ஐ.; **‘ரீல்ஸ்’ – பொழுதுபோக்கா? புதைமணலா?**; முதற்பதிப்பு; 2026; பக். 144; ரூ.180; சுவாசம் பதிப்பகம், சென்னை; சமூகவியல்; ISBN: 9789347604119

ராகவன், பா; **பேயுரு**; முதற்பதிப்பு; 2026; பக்.126; ரூ.160; எழுத்து பிரசுரம், ஜீரோ டிகிரி பப்ளிஷிங், எண் 75 & 76, முதல் தளம், குப்புசாமி வீதி, பாலாஜி நகர், பாடி, சென்னை – 600050; புதினம்; ISBN: 9789347206337

ராஜமலர் ஆறுமுகம்; **இலங்கை வரலாற்றைத் தொடங்கிய இந்திய இளவரன் விஜயன்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.325; மணிமேகலைப் பிரசுரம், தணிகாசலம் சாலை, தியாகராய நகர், சென்னை 600017; புதினம்.

லட்சுமி, ஜே.ஆர்.; **வால்பாறை**; கெவின்கார்கி பப்ளிகேஷன்ஸ்; பக்.?, ரூ.300; புவியியல்.

லேனா தமிழ்வாணன்; **நேரநிர்வாகக் கலைக்களஞ்சியம்**; பதிப்பு:?; 2026; பக்?; ரூ.640; மணிமேகலைப் பிரசுரம், தணிகாசலம் தெரு, தியாகராய நகர், சென்னை 600017; மேலாண்மை

வசந்தகுமார், டி.ஜி.ஆர் & பிரகாஷ் மேனன் & சுரா (மொழி); **இன்றைய மலையாள சிறுகதைகள்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.150; வ.உ.சி.நூலகம், சென்னை; மொழிபெயர்ப்புச் சிறுகதைகள்.

வசந்தி, சீ & ஐஸ்வர்யபிரதினா, த & சுரேஷ் பாலாஜி; **தமிழி: கல்வெட்டுகளும் கண்டுபிடிப்புகளும்**; முதற்பதிப்பு; 2026;பக்.?; ரூ.120; கங்கராணி பதிப்பகம்; மொழியியல்



வள்ளியப்பன், சோம; **சம்பளம் பத்தலையா**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.170; இந்து தமிழ்திசை வெளியீடு, சென்னை; பொருளாதாரம்

வ.வே.சு.ஐயர்; **கம்பராமாயணம் ஓர் ஆய்வு**; சுரேஷ், டி.ஆர் (மொழி); முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.750; சந்தியா பதிப்பகம், சென்னை; இலக்கியத் திறனாய்வு.

விஜயலட்சுமி, த (தொகு); **ஐங்குறுநூறு – புதிர் விடுத்துப் புரிந்துகொள்ளுதல்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.330; ஸ்நேகா பதிப்பகம், சென்னை; இலக்கியத் திறனாய்வுக் கட்டுரைகள்.

வேல்கண்ணன்; **வேல்கண்ணன் கவிதைகள்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.220; மெய்நிழல் பதிப்பகம்; கவிதைத்தொகுதி

வேல்முருகன் சி & இலட்சுமணன் சி; **தன்னம்பிக்கையும் சுயமுன்னேற்றமும்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.130; காவ்யா பதிப்பகம்; உளவியல்

ஷான் கருப்பசாமி; **பொன்னி**: பாகம் 1 இரணியசேனை; முதற்பதிப்பு; 2026; பக்.316; ரூ.410; யாவரும் பதிப்பகம், எஸ்.ஜி.பி.நாயுடு வணிகவளாகம், வேளச்சேரி முதன்மைச் சாலை, தண்டீவரம் நகர், வேளச்சேரி, சென்னை 600042; புதினம்

ஹபிசுல்லா, எஸ், ஏ. எஸ்,; **ஐ.சி.யூ.வில் ஜனநாயகம்**; முதற்பதிப்பு; 2026; பக்.112; ரூ; சவுத் சென்ஸ், சென்னை; அரசியல் கட்டுரைகள்.

ஜார்ஸ் டிராகல்; **அந்திப்பாடல்**; கணேஷ்ராம், கே (மொழி); முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.200; குலுங்காநடையான் வெளியீடு, சென்னை; மொழிபெயர்ப்புக் கவிதைகளின் தொகுப்பு

ஜில்லேள்ள பாலாஜி; **சவுரிக்கூந்தல்**; இளம்பாரதி (மொழி); முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.375; அகநி வெளியீடு, வந்தவாசி; தெலுங்கிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட சிறுகதைகளின் தொகுப்பு.

ஜெகந்நாதன், குரு; **விஜயநகரப் பேரரசின் எழுச்சியும் வீழ்ச்சியும்**; பதிப்பு:?; 2026; பக்.?; ரூ.250; சுரா பதிப்பகம், சென்னை; வரலாறு

ஜெகாதா; **தமிழ்த்தேசியம் நேற்றும் இன்றும்**; முதற்பதிப்பு; 2026; பக்.352; ரூ.350; கங்காராணி பதிப்பகம், சென்னை 600072; வரலாறு.

ஜெயக்குமார், புன்னகை பூ; **அஞ்சலக்கா**: மஞ்சள்வெயில் பணியாளர்கள்; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.140; வேரல் புக்ஸ், சென்னை; 75 தலைப்பிலான கவிதைகளின் தொகுப்பு.

ஜெயசீல ஸ்டீபன், எஸ்; **மக்கள்தொகைக் கணக்கெடுப்பு**: சாதிவாரி முறையில் அடையாள வேறுபாடுகளும் முரண்பாடுகளும்; தமிழ்மணி, ந.மு (மொழி); முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.140; நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை; பொருளாதாரம்.

ஜெயஶ்ரீ கண்ணன்; **நானும் இன்ட்ரோவர்ட்தான்**: சமூக-உளவியல் கட்டுரைகள்; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.350; ஹெர்ஸ்டோரிஸ் வெளியீடு, சென்னை; உளவியல் கட்டுரைகளின் தொகுப்பு.

ஜோசப் பிரபாகர்; **இயற்கையில் அறிவியல்**;முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.120; இந்து தமிழ்திசை வெளியீடு, சென்னை; 25அறிவியல் கட்டுரைகளின் தொகுப்பு.

ஜோதி நிர்மலாசாமி, பா; **அன்பும் ஆளுமையும்**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.950; வானதி பதிப்பகம், தியாகராய நகர்; சென்னை 600017; தன்வரலாற்றுக் குறிப்பு

ஸ்வர்ண ரம்யா; **காதலால் காதலைக் காதலி**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.170; மெய்நிழல் பதிப்பகம்; கதைத்தொகுப்பு

ஸ்வேதா புகழேந்தி; **அவள் ஒரு ரசிகை**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.150; வேரல் புக்ஸ்; கவிதைத் தொகுப்பு.

_______, **ஏழுநகர் வாழ்த்து**; முதற்பதிப்பு; 2026; பக்.?; ரூ.150; ஐநூற்றுவர் பதிப்பகம்; நகரத்தார் திருமணமுறை பற்றி ஓலைச்சுவடியிலிருந்து எடுத்தெழுதப்பட்ட ஆவணம். சமூகவியல்


புத்தகச்செய்தி இதழைப் பெறுவதற்கு . . . .


எவ்வித ஆண்டுக்கட்டணமும் வேண்டா. நன்கொடை வேண்டவே வேண்டா. பொருளுதவும் நோக்கிலான விளம்பரங்கள் அறவே வேண்டா. எமக்கு வேறு சார்பாளர் யாரும் இல்லை. எந்த வங்கியிலும் கணக்கும் இந்த இதழுக்குக் கிடையாது. முழுக்க முழுக்க இஃதொரு தன்னார்வத் தொண்டறம்.

உங்கள் புலனப்பேசிக்கோ மின்னஞ்சல் முகவரிக்கோ இணையவழி அனுப்பப்பெறும் இதழ்களை இலவசமாகத் தரவிறக்கம் செய்து படிங்கள். நண்பர் குழுக்களில் பகிர்ந்திடுங்கள். இந்த இதழில் வெளிவரும் நூல் அறிமுகங்களும் செய்திகளும் இலவசமாகவே இடம்பெறுவன. அவற்றுக்காக எவ்வகைக் கட்டணமும் கிடையாது. நூல்வெளியிடுவோர் நூல்முகப்பின் சிறிய அளவுப்படம், நூலின் தலைப்பு, ஆசிரியர், பதிப்பு, வெளியான ஆண்டு, பக்கம், விலை, பதிப்பகம், உள்ளடக்கம் ஆகியனவற்றை எமக்கு அனுப்பினால் போதும்.

9791861662 – புலனம் **maraimalai@yahoo.com** மின்னஞ்சல்

மறைமலை இலக்குவனார் நூல்கள்








வெளியீடு


மின்னங்காடிப் பதிப்பகம்

24, அண்ணா 3ஆவது குறுக்குத் தெரு, அவ்வை நகர், பாடி, சென்னை 600050.
தொலைபேசி: 7299241264 & 7824049160











தொடர்புக்கு


மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு,
பாரிமுனை,
சென்னை - 600 108
தொலைபேசி: 93805 30884























Centre for History And Archaeological Research

29 Jalan Kathi, Singapore 468675

ranjithkumar@chaarsg.com

+6589519727